# தளபதி கேணல் கிட்டு நினைவுநாள் உணர்வுடன் அனுஷ்டிப்பு

விலை ரூபா 5-00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 3 இதழ் 347
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 17-1-1995

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்படபத்துவேங்கைகள் வங்கக் கடலில் காவியமான் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நேற்றுக் குடாநாடு பூராவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

முத்திரைச் சந்தைதியிலுள்ள கேணல் கிட்டு நினைவுப் பூங்காவில் நேற்றுக்காலை 9மணிக்கு கேணல் கிட்டு மற்றும் 9 வீரவேங்கைகளுக்கு எழுச்சி பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது. விடுதலைப்புலிகள் மாவீரர் பணிமனைப்
(4-ம பக்கம் பார்க்க)

## மீன்பிடி கட்டுப்பாடு தளர்த்தப்படும்?

(கொழும்பு)
இராணுவ நிலைகளுக்கு அப்பால் பகலில் மட்டும் கடலில் மீன் பிடிக்கப்பட்ட அனுமதியை தளர்த்துவது பற்றி அரசு ஆராய்ந்து வருவதாகவும் அநேகமாக சாதகமான முடிவு வரலாம் என்றும் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் ஒருவர்
(2ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்னை விவகாரத்தில் ராணுவ அழுத்தத்துக்குபயந்து சந்திரிகா தவறிழைக்கக்கூடாது!

## திருவில் கூட்டத்தில் அன்ரன் பாலசிங்கம் உரை!!

[யாழ்ப்பாணம்]
இனப்பிரச்னை தீர்வு விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இராணுவ அழுத்தங்களுக்குப் பயந்தும், இராணுவ போர் உபாயங்களைக் கைவிடாமலும் சிங்கள பேரினவாதிகளுக்கு அடிபணிந்தும் நீதி வழங்கத் தவறினால் அது அவர் செய்யும் ஒரு பெரிய வரலாற்றுத் தவருக அமையும் எனவிடுதலைப்புலிகளின், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறினுர்.



வங்கக்கடலில் காவியமான மூத்ததளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சியில் திருவிலில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறினுர்.

இந்தக்கூட்டத்தில் தொடர்ந்து பேசிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியதாவது:

### பேச்சுக்கள் வெற்றி அளிக்குமா?

இன்றைய அரசியல் நிலைமை என்ன? பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மூன்று கட்டத்தில் மூன்று சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன. இந்தப் பேச்சுக்கள் எந்தத் திசையில் செல்கின்றன. இதனுல் மக்களின் பிரச்னைகள் தீருமா? அரசு என்ன செய்யப்போகிறது? இந்தப் பேச்சுக்கள் வெற்றி அளிக்குமா? தமிழ் மக்களுக்கு நிம்மதியான, நிரந்தரமான சமாதானச் சூழ்நிலை ஏற்படுமா? இனப்
(2ம் பக்கம் பார்க்க)

## மோதல்தவிர்ப்புதொடர்ந்து இடையூறின்றிகடைப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)
விடுதலைப்புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான தாக்குதல் நிறுத்த உடன்பாட்டில் நேற்று இரவு வரை எதுவித மோதல் சம்பவமும் இடம் பெறவில்லையென தெரிவிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு பகுதியிலுள்ள சகல இடங்களிலும் மோதல் தவிர்ப்பு மிகவும் அவதானமாக இரு தரப்பினராலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது,

இதுவரை பல மாவட்டங்
(4-ம் பக்கம் பார்க்க)

பப்புவா நியூகினியாவில்

## பாப்பரசரை படுகொலை செய்ய முயற்சி

(மணிலா)
பாப்பரசர் இரண்டாவது அருளப்பர்சின்னப்பரைகொலை செய்வதற்கு, பப்புவா நியூகினியா நாட்டுக்குள் இரண்டு கொலையாளிகள் உட்புகுந்துள்ளனர் என்று பப்புவா நியூகினியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர் என்றும், அந்தக் கொலையாளிகள் இருவரும் மணிலாவிலிருந்து வந்தார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாப்பரசர் நான்கு நாடுகள் சுற்றுப்பயணத்தில் மணிலா சென்ற பின், தற்போது நியூகினியில் தங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ம-இ

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க் கிழமை காலை 8-00 மணி முதல் காலை 10-00 மணி வரையும் மாலை 4-00 மணி முதல் இரவு 8-00 மணி வரையும் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## பொருளாதாரத் தடை தளர்வு; நாளைவர்த்தமானி அறிவித்தல்

[கொழும்பு]
வடபகுதி மீதான பொருளாதார தடையை இயன்ற வரையில் முற்ருகவே தளர்த்தவுள்ளோம் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நாளை புதன்கிழமை வெளியிடப்படலாம் என சிரேஷ்ட இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.
(2-ம் பக்கம் பார்க்க)

இராணுவத்தில்

## 11 லெப். கேணல்களுக்கு பதவி உயர்வு!

(கொழும்பு)
ஸ்ரீலங்கா இராணுவத்தில் லெப். கேணல் தரத்தைச் சேர்ந்த 11பேர் கேர்ணல்களாக கடந்த முதலாம் திகதியிலிருந்து பதவி உயர்த்தப்பட்டதாக இராணுவ தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

பதவி உயர்த்தப்பட்ட பதினொரு பேர்களும் வருமாறு: எம். டி. ஆர். பீரிஸ், எம்.ஆர் டபிள்யு. டி, சொய்சா, எம். எல். ஜயரத்ன, டி. எச். எம். ஆர். தம்மித்த, டபிள்யு. பி. பீரிஸ், கே. ஜீ. டி. ம்கிந்தா, எஸ். ராஜகிங்க, ஜி. எம். ஞெக்வூட், எல். ஐ. ஆர். விஜயரட்ண, யு. பி. எல், பெர்ஞண்டோ ஆகியோராவர். க-இ

## சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அரசியலமைப்புதிருத்தப்படும்

### அமைச்சர் தர்மசிறி — பீரிஸ் தகவல்

(கொழும்பு)
அரசியலமைப்பு திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது போனுல், சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும் என்று உல்லாச பயணத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்
(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**''றபர் சீல்''**

''றபர் சீல்'' செய்வதில் அனுபவமுடையவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்: செல்வம் ஆட்ஸ், சுன்னுகம். (சி-1375)

**25-3-95 வரை செவ்வாய் வக்கிரம்**

புத்தாண்டுப் பலன்கள் ரூ. 10/- (நூலாசிரியர்-சத்யா) எங்கும் கிடைக்கும். பாடசாலை உபகரணங்கள் காகிதாதிகளுக்கு சுரேகா புத்தக நிலையம், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-1374)

**நீங்களும் நாவல் எழுதலாம்**

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை தனது 'அக்கரைச்சீமை'யில் நாவலுக்கு எழுதிய முன்னுரையை வாசித்துப் பாருங்கள். நீங்களும் நாவல் எழுதலாம். (சி-1353)


## மீன்பிடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரக் கட்டுப்பாடின்றி இரவிலும் வடபகுதிக் கடலில் கடற்ரொழிலாளரை மீன் பிடிக்க அனுமதிப்பீர்களா? எனக் கேட்டபோதே அவ் இராணுவ அதிகாரி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

க-இ

## பொருளாதாரத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் இதுபற்றி தெரிவிக்கையில் பெற்ரேல், டீசல் ஆகியவற்றுக்கான தடை தொடர்ந்தும் இருக்கும். அத்துடன் ஆயுதங்கள், வெடிமருந்துகள், ஈயம். அலுமினியம், இரசாயனப்பொருட்கள் மீதான தடையும் தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

தடை செயயப்பட்ட பொருட்களில் ஏழு அல்லது எட்டு பொருட்களை தவிர ஏனையவற்றை வடபகுதிக்கு கொண்டுசெல்ல அனுமதிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

க-இ

# இனப்பிரச்னை விவகாரத்தில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பிரச்னைக்கு அரசியல் பேச்சுக்கள் மூலம் தீர்வு ஏற்படுமா? என்று எமது மககள் கேட்கிருர்கள்.

எனவே இந்தப் பேச்சு வார்த்தைகள் சம்பந்தமாகவும், எமது நிலைப்பாடு தொடர்பாகவும், அரசின் நிலைப்பாடு தொடர்பாகவும் எடுத்துக் கூற விரும்புகிறேன்

## அரசு வாக்குறுதிகளை அளிக்கிறது

மூன்று கட்டப் பேச்சுக்கள் முடிவடைந்துவிட்டன. ஏதாவது உருப்படியான எதனையும் காணவில்லை. அரசு வாக்குறுதிகளை அளித்துக்கொண்டிருக்கிறது. அன்ருடப் பிரச்னைகள் என்றும், அடிப்படைப் பிரச்னைகள் என்றும் சிக்கல்கள் இருக்கின்றன. பாதை திறப்பதில சிக்கல்கள் இருக்கின்றன. ஆரம்பத்தில் இந்தப் பேச்சுக்கள் தொடங்கும் நேரத்தில் நாங்கள் இதனை இரண்டு கட்டமாக, இரண்டு பரிமாணத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டோம்.

அதாவது மக்கள் எதிர் கொள்ளும் அன்ருடப் பிரச்னைகள், அத்தியாவசியப் பிரச்னைகள். இந்தப் பிரச்னைகள் முதலில் தீர்த்து வைக்கப்பட வேண்டும் எனக் கூறினேம். இதற்கு அடுத்த கட்டமாக அடிப்படையான இனப் பிரச்னை ஆராயப்பட்டுத் தீர்வு காணப்படவேண்டும் என்றும் கூறினேம். முதலில் பேச்சுக்களை நடாத்த வந்த அரசுத் தூதுக் குழு ஒரு நிகழ்ச்சி நிரலைத் தந்தது. அதிலும் தமிழ் மக்களின் அன்ருடப் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும். அவற்றைத் தீர்ப்பதற்கான உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளும் எனக் கூறியது.

## பாதை திறக்கப்பட வேண்டும்

இதையடுத்து முதற்கட்ட பேச்சில் அன்ருடப்பிரச்னை என்ருல் என்ன என்பதை விளக்கிக் கூறினேம். முதலில் ஒரு போர்நிறுத்தம் தேவை. போர் நிறுத்தத்தை தொடர்ந்து ஒரு இயல்பான நிலை தோன்ற வேண்டும், சமாதானம் தோன்ற வேண்டும் என்ருேம். அடுத்து பொருளாதாரத்தடை நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினேம். அடுத்து எமது மக்கள் யாழ். குடாநாட்டிலிருந்து வடதமிழீழத்திற்கும் கொழும்புக்கும் செல்வதற்காக ஒரு பாதை திறக்கப்படவேண்டும் என்ருேம் அடுத்ததாக கடல் வலயத் தடை நீக்கப்பட வேண்டும் என்றும் இறுதியாக அகதிகளாக குடியர்ந்திருக்கும் எமது மக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் எனக் கூறி, அன்ருடப் பிரச்னை என்ருல் என்ன என்பதை தெளிவாக சுட்டிக்காட்டினேம்.

## ராணுவ நிலைப்பாட்டுடன் சம்பந்தம்

ஆரம்பத்தில் இவர்களுக்கு அன்ருடப் பிரச்னைகளின் பரிமாணம் என்ன என்று புரிந்ததோ இல்லையோ அவர்கள் அதை தீர்ப்பதாக வாக்குறுதியளித்தார்கள். ஆனல் கொழும்பு திரும்பிய பின் இந்த பிரச்னைகளை ஆராய்ந்து பார்த்த போது அவர்களுக்கு ஒரு விஷயம் விளங்கியது என்னவென்ருல் எல்லாப்பிரச்னைகளும் அதாவது அன்ருடப் பிரச்னைகள் என புலிகள் சுட்டிக் காட்டிய ஒவ்வொன்றும் இராணுவ நிலைப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பிரச்னைகள். பொருளாதாரத் தடையை முற்ருக நீக்கப்படுவதற்கு இராணுவம் எதிர்ப்பு தெரிவிக்கிறது. பாதையை திறப்பதற்கு இராணுவம் அந்த நிலையிலிருந்து விலகவேண்டும்.

## ராணுவம் எதிர்ப்பு

போர் நிறுத்தம் செய்வதற்கு இராணுவம் இணக்கம் தெரிவிக்கவேண்டும். அகதிகளை மீளக்குடியமர்த்துவதற்கு இராணுவம் தான் பிடித்து வைத்திருக்கும் குடியேற்ற இடங்களிலிருந்து விலகவேண்டும்,

இப்படியாக ஒவ்வொரு பிரச்னையிலும் இராணுவம் சம்பந்தப்பட்டிருப்பதை அவர்கள் கண்டு கொண்டார்சள், ஆகவே இராணுவம், இந்த அன்ருட பிரச்னைகளை தீர்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. புலிகளை நம்பவேண்டாம். இந்த பிரச்னைகளில் புலிகளுக்கு விட்டுக்கொடுக்க வேண்டாம், இந்தப்பிரச்னைகளை தீர்க்கமுடியாது என்ற ரீதியில் அரசுக்கு அழுத்தங்களைப் போட்டது.

## அரசுக்கு சிக்கல் ஏற்பட்டது

ஆகவே அரசுக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டது. இராணுவத்தின் ஒத்துழைப்பில்லாமல், இராணுவத்தின் அனுசரணையில்லாமல் இந்தப்பிரச்னைகள் எதனையும் தீர்க்க முடியாது என்ற நிலையை உணர்ந்து கொண்டார்கள். இதையடுத்து அரசு, தலைவர் பிரபாகரனுக்கு கடிதம ஒன்றை எழுதியது.

முதலில் போர் நிறுத்தம் செய்வோம். அதனுடன் இனப்பிரச்னையை பற்றி பேசுவோம் என கூறியது. அதற்கு நாம் அப்படி முடியாது எனக் கூறினேம் போர் நிறுத்தத்தை இரு தரப்பும் செய்யலாம். ஆனல் நீங்கள் வாக்குறுதி அளித்த மாதிரி, 'நீங்கள் உங்கள் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டது போன்று, தமிழ்மக்கள் எதிர்நோக்கும் அன்ருடப் பிரச்னைகளைத் தீர்த்த பின்னர் தான் அடுத்த கட்டமாக இனப் பிரச்னைக்குச் செல்ல வேண்டும்என நாங்கள்வலியுறுத்தினேம். தலைவர் இதனைவலியுறுத்திக் கடிதம் ஒன்றை எழுதினர்.

## பிரச்னை இழுபட்டது

இப்டடியாக இந்தப் பிரச்னை இழுபட்டது. மாறி மாறிக் கடிதப் போக்குவரத்துக்கள் நடந்தன. ஆனல் தலைவர் மிகவும்உறுதியாக இருந்தார். அதாவது எமது மக்கள் நாளாந்தம் எதிர் கொள்ளும் அன்ருடப் பிரச்னைகளை அப்படியே வைத்து விட்டு, இனப் பிரச்னை என்று சொல்லப் போனல் அது எவ்வளவு காலம் செல்லுமோ தெரியாது அவர்கள் என்ன தரப்போகிருர்களோ தெரியாது. அப்படியாக இனப் பிரச்னை சிக்கலுக்குள் தற்போது போய் மாட்டுப்படுவதற்கு முன்னர் எமது மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். உண்மையான ஒரு சமாதானச் சூழ்நிலை உருவாக வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினர். அதன்படியே பேச்சுக்கள் நடக்கவேண்டும் எனத் தலைவர் இறுதியாக, உறுதியாக நின்றபடியால், அரச குழுவினர் திரும்பி வந்தார்கள். அன்ருடப் பிரச்னைகள் பற்றி மீண்டும் இரண்டாம் கட்டப் பேச்சுகளில் ஆராயப்பட்டது.

## போர் நிறுத்த உடன்பாடு செய்துகொண்டோம்

அன்ருடப் பிரச்னைகளில் முதலாவதாகப் போர் நிறுத்தம். போர் நிறுத்தத்திற்கு நாம் ஓர் உடன்பாடு செய்து கொண்டோம். அதாவது தலைவர் பிரபாகரனும், ஜனதிபதி சந்திரிகாவும் கைச்சாத்திட்ட ஓர் ஒப்பந்தம். இதில் யுத்த நிறுத்தத்தை எப்படிக் கடைப் பிடிப்பது என்ற வழிமுறைகள் உள்ளன. இந்த வழிமுறைகளின்படி எந்தக் காரணத்தைக்கொண்டும் அரச படைகள் புலிகள் மீது தாக்குதல் நடத்தக்கூடாது. நாங்களும் அவர்கள்மீது தாக்குதல் நடத்தக்கூடாது. எந்த இராணுவ முகாம்களில் எந்தளவுக்கு இராணுவமும், புலிகளும் விலகி நிற்கவேண்டும் என்ற விபரங்கள் உள்ளன.

## மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டது

இதில் முக்கிய விடயம் என்னவென்ருல், கடல் பகுதியில் சட்டபூர்வமானமுறையில் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன் மூலம் தமிழீழ மக்கள் கடல் பகுதியில் சுதந்திரமாச்சென்று மீன் பிடிப்பதற்கு அந்த ஒப்பந்தம் மூலம் உரிமை இருக்கின்றது. இப்படி இருக்கும் போது இந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், நாம் சமாதானத்தைப் பிரகடனப் படுத்திய பின்னர், யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் அரசு ஓர் அறிவித்தலை விடுத்தது. அதாவது கடல்பகுதியில் ஒருசில பிரதேசத்தில் மட்டுமே நடமாடமுடியும். இரவுநேர மீன்பிடித்தலை அனுமதிக்கமுடியாது. எமது போராளிகள் ஆயுதம் தாங்கி கிழக்கு மாகாணத்தில் நடமாடமுடியாது எனப் பல விதிமுறைகளைப் போட்டது.

## கடும் ஆட்சேபம் தெரிவித்தோம்

இதற்கு நாம் கடும் ஆட்சேபம் தெரிவித்தோம். மூன்ரும் கட்டப் பேச்சுக்கு வந்தபோது அவர்களிடம் இது பற்றி விளக்கமாகக் கூறினேம். இரு தரப்பும் இணங்கி ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திய பின்னர் நீங்கள் ஒருதலைப்பசமாகச் சில அறிவுறுத்தல்களைச் செய்வது போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாகும். இது நியாயமானதில்லை. எமது மக்கள் கடலில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கவேண்டும். இரவில் தான் இங்கு மீன்பிடிக்கவேண்டும். பகலில் மீன்பிடித்து இரவு வேளையில் சந்தை நடத்தமுடியாது. எனவே இரவில் மீன் பிடிக்க நீங்கள் அனுமதிக்க வேண்டும் என இம்முறை நாங்கள் அரச குழுவினரிடம் கூறியுள்ளோம்.

## பொருளாதாரத்தடை இராணுவம் அட்டகாசம்

அடுத்ததாகப் பொருளாதாரத் தடை. ஏற்கனவே 28 பொருட்களுக்குத் தடை நீக்கம் செய்யபபட்டாலும் தாண்டிக்குளத்திலிருந்து அவற்றை இங்கு எடுத்து வருவதற்கு ஏராளமான பிரச்னைகள் உள்ளன. இராணுவம் தான் விரும்பிய பொருட்களை விடும் சிலவற்றைத் தடுக்கும். பொருட்கள் வரும் வாகனங்களைப் பல நாட்களுக்குத் தடுத்துவைக்கும். இப்படியாகப் பல நெருக்குதல்களை இராணுவம் போட்டு வந்தது. ஆனல் எமது மக்களின் அன்ருட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பொருட்கள் இன்னும்தடைசெய்யப்பட்டே உள்ளன.

## எரிபொருளை தடுப்பதில் பயனில்லை

குறிப்பாக எரிபொருளை எடுத்துக்கொள்வோம். அதாவது யாழ்ப்பாணத்தில் உள்ள கைத்தொழில்களை கட்டிஎழுப்பவோ, விவசாயத்தைபெரிய அளவில் செய்யவோ, மீன் பிடித்தொழிலை பெரிய அளவில் செய்வதற்கோ போக்குவரத்தை செய்வதற்கோ, இதற்கெல்லாம் எரிபொருள் தேவை. வாகனங்களை மற்றும் உரம் வாகன உதிரிப்பாகங்களை தடுத்துவைத்துக் கொண்டு இங்கு வந்து உங்களது பொருளாதாரத்தை வளர்க்கப்போகிருேம் எனக் கூறுவதில் அர்த்தமில்லை. ஆகவே பொருளாதாரத்தடை முற்ருக நீக்கப்பட்டு எவ்வித இடையூறுமின்றி இங்கு பொருட்கள் வருவதற்கு அனுமதிக்கவேண்டும். அதாவது சிங்கள மக்களுக்கு அங்கு என்னென்ன பொருட்கள் என்னென்ன விலையில் கிடைக்கிறதோ, தென்னிலங்கையில் அவர்கள் என்னென்ன பொருட்களை பெறுகிருர்களோ அதேபொருட்களை அதேவிலையில் பெறுவதற்கான வாய்ப்பும், சர்ந்தப்பமும் அளிப்பதுதான் உண்மையான நடைமுறை, இதை நீங்கள் செய்யவேண்டும் அப்போதுதான் தமிழ் மக்கள் உங்கள்மீது நம்பிக்கை வைப்பார்கள் எனக் கூறினேம்.

## வாக்குறுதி அளித்து சென்ருர்கள்

இந்தமுறை இதுபற்றி பேசப்பட்டது தாங்கள் போய் ஜனதிபதியுடன் கதைத்து பொருளாதாரத்தடையை நீக்குவதாக வாக்குறுதி அளித்துவிட்டுச் சென்றுள்ளார்கள். என்ன செய்கிருர்கள் என்று பார்ப்போம்.

அடுத்தது முக்கியமாக பாதை திறப்பு. அதாவது தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்து மக்கள் எதிர்பார்த்து நிற்கும் ஒரு பிரச்னை. கிளாலியால் போய் எமது மக்கள் படும் கஷ்டம் பற்றி அரசுக்கு தெரியும் அந்தப்பயணம் எத்தனை நாட்கள் பிடிக்கிறது, மக்கள் எங்கெல்லாம் தரித்து நின்று பெரிய துன்பப்பட்டு பயணம் செய்கிருர்கள் என்பது அரசுக்கு தெரியும். ஆகவே ஒரு பாதையை திறந்து விடுங்கள் என்று கேட்டோம்

## பாதைகளை ராணுவம் மறித்து நிற்கிறது

இந்தப்பிரச்னையை மக்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும் இந்தப் பிரச்னையில்தான் இந்தப் பேச்சுவார்த்தை இன்று சிக்குப்பட்டுப்போயுள்ளது, யாழ். குடாநாட்டை வட தமிழீழத்துடன் இணைக்கும் பிரதான இரு பாதைகளிலும் ராணுவம் வந்து தரித்து நிற்கிறது முன்னர் நாம் ஊரியானுக்கூடாக சென்ருேம், அந்தப் பாதைகளையும் தடுத்து வெற்றிலைக் கேணிவரை வேலி போட்டு

(4-ம் பக்கம் பார்க்க)


# பகுதி நேரப் பேணுநர்கள் தேவை

[பெண்கள்]

(1) கைக்குழந்தைகளைப் பேணுவோர்:

(2) 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகளைப் பேணுவோர்:

பிள்ளைகளைப் பேணுவதில் அனுபவம் மிக்கவர்கள் தேவை

தாதிய சேவையில் அனுபவம் மிக்கவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை: 23 வயதிற்கு மேற்பட்டோர்

உரிய சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் வேதனம் வழங்கப்படும்.

நிரந்தர வேலைவாய்ப்பைப் பெறுவோர் சேமலாப நிதி பெறுவதற்கு உரித்துடையவராவார்.

**விண்ணப்ப முடிவு திகதி: 31-01-1995**

அனுப்ப வேண்டிய முகவரி:

விளம்பர இல: எ 4695
மே/பா ஈழநாடு
சிவன்கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

— நிர்வாகம்
செஞ்சோலை

(எ 4695)

### மணிவாக்கு

பொய் தான் எல்லா எதிரிகளையும் விடப் பெரியது. அதிலும் பெரிய எதிரியானது எது தெரியுமா? தவருனஅபிப்பிராயங்கள் தான்.

நீட்ஸே

## புலிகளின் பாதுகாப்பிலுள்ள
# யுத்தக் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம் இருப்பர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிடம் யுத்தக்கைதிகளாகவுள்ள பொலிஸார் அடுத்த மாதம் 20ம் திகதி முதல் மீண்டும் உண்ணாவிரதமிருக்கப்போவதாக கூறியுள்ளதாக 'ஐலன்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த 4 1/2 வருடங்களாக யுத்தக்கைதிகளாக இருக்கும் இவர்கள் தமது விடுதலை கோரியே இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் 'ஐலன்ட்' தெரிவித்துள்ளது.

இதேவேளை 3ம்கட்டபேச்சுக்காக யாழ்ப்பாணம் வந்த அரச பிரதிநிதிகள் இவர்களை சந்தித்தபோது தமது விடுதலைக்கு உடன்நடவடிக்கைஎடுக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர், மேலும் இது குறித்து ஜனதிபதி சந்திரிகாவிடம் வலியுறுத்துமாறும் கோரியுள்ளனர்.

இந்தயுத்தக்கைதிகளைதென்னிலங்கை வெளிநாட்டு பத்திரிகையாளரும் சந்தித்தபோது தமது விடுதலைக்காக அரசை வற்புறுத்துமாறும் அவர்கள் கேட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -சி

### தபால் விநியோகம்

(அரியாலை)

கடந்த 14-ம் திகதி சனிக்கிழமை கோமாரிக் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட 289 தபால்பொதிகளிலுமுள்ள தபால்களும் இன்று செவ்வாய் முதல் விநியோகம் செய்யப்படவுள்ளது -59

## நமது நோக்கு

### பொதுப் பணிகள்

வரிகள், நன்கொடைகள், உதவிகள் ஆகியவற்றைக் கொண்டு ஆற்றும் பொதுப்பணிகள் ஏற்றத்தாழ்வின்றி கூடியளவு மக்களுக்கு நன்மை தரும் விதத்தில் அமையவேண்டும்.

ஆனல் நடைமுறையில் எல்லோரையும் திருப்திப்படுத்தும் முறையில் அப்பணிகள் ஆற்ற முடியாத நிலை உருவாகின்றது.

ஏனெனில் மக்களில் சிலர் சுயநலத்தோடு செயற்படுகின்றனர். பொதுப்பணிகளாற் கிடைக்கும் நன்மைகளிற் பெரும்பகுதி தமக்கே கிடைக்கவேண்டும் என எண்ணுகின்றனர்.

அதனுல் தமக்குஅல்லது தமது பகுதிக்கோ அதிகளவு பணம் ஒதுக்கி பணிகளை நிறைவேற்றவேண்டுமெனக் கோரிக்கைகள் விடுக்கின்றனர்.

தட்டுபவர்களுக்கே கதவு திறக்கப்படும் என்ற மனேபாவத்தோடு சில நிர்வாகிகள் செயற்படுவதால் முழுச்சமுதாயத்தைப்பற்றியும் சிந்திக்கத் தவறுவதால் சில பகுதிகள் புறக்கணிக்கப்படும் நிலை ஏற்படுகின்றது.

சிலவேளைகளில் நீதி வரம்புக்கு அப்பாற்பட்ட கோரிக்கைகள் உரத்த குரலில் அதட்டிக் கேட்கப்படுவதால் எமக்கேன் வீண் சச்சரவு?' எனச் சில நிர்வாகிகள் கருதி கோரிக்கைகளை ஏற்கின்றனர்.

அதனுல் பாதிக்கப்பட்ட பகுதிகள் தொடர்ந்தும் அதே நிலையில் இருக்கும் அவலநிலை தோன்றுகின்றது.

எனவே தீர்மானம் எடுக்கும் அதிகாரிகள், பொதுப்பணியாளர்கள், பக்கம் சாராமல் நேர்மையோடு செயற்படுவது அவசியமாகிறது,

உதாரணமாக சில பகுதிப் பொதுவீதிகள் நீண்டகாலமாகவே திருத்தப்படாமல் இருக்கின்றன. திருத்தப்படும்போதும் அரைகுறையாக அக்கறையின்றிச் செய்வதால் மீண்டும் விரைவாக அதே பாழடைந்த நிலைக்கு வந்து விடுகின்றன.

அதேபோல அதிகம் பாதிக்கப்படாத சிலர் அதிக நிவாரணம் பெற்றிட பாதிக்கப்பட்ட சிலர் கேட்கும் வகை தெரியாது தட்டிக்கேட்கும் முறை தெரியாதுவாய்மூடி மெளனிகளாக இருக்கின்றனர்.

பொதுப்பணிகள் சீராக நடைபெற பொறுப்புணர்ச்சியோடு செயற்வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்[

## பாப்பரசரை தரிசிப்பதற்கு
# யாழ். நகரிலிருந்து நாளை 1856 பேர் புறப்படுவார்கள்

(யாழ்ப்பாணம்)

பாப்பரசரை தரிசிப்பதற்காக யாழ்ப்பாணம்ஆயர்பணிமனையில் தமது பெயர்களைப் பதிவு செய்த 1856 கிறிஸ்தவ மக்கள் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் ஆசனக்கோவிலில் இருந்து புறப்பட்டுச்செல்லவுள்ளதாகஇப்பயணஒழுங்குகளுக்குப் பொறுப்பான குருவானவர் தெரிவித்தார்.

இப்பிரயாணம் பற்றி அவர் மேலும் தெரிவித்தாவது; எமது பணிமனையில் பதிவு செய்துகொண்ட 1856 பேருடன் இதற்குப் பொறுப்பாக குருவானவர்களும் கன்னியாஸ்திரிகளும் கூடச்செல்லவுள்ளனர். இவர்களுடன் கொடிகாமம், மிருசுவில் பகுதி பங்குத்தந்தைகளிடம் ஏற்கனவே தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொண்டவர்களும் இக்குழுவினருடன் சேர்க்கப்படுவார்கள். இவர்களுக்கான பதிவு இலக்கம் வழங்கப்படுவதுடன் இப்பயணத்துக்கான தொடர்பு இலக்கமும் இவர்களுக்கு வழங்கப்படும்.

இவ்விடங்களிலிருந்து நாளை பிறபகல் ஒருமணிக்கு வாகனங்கள் மூலம் தொடரணியாக புறப்பட்டுச் செல்லும் இவர்கள் கிளாலியைச் சென்றடைவார்கள். கிளாலியில் வைத்து இவர்கள் எல்லோரும் ஒவ்வொரு குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள் ஒவ்வொரு குழுக்களும் 14 அங்கத்தவர்களைக் கொண்டதாக இருக்கும். 6 குழுக்களுக்கு ஒருகுருவானவர் அல்லது ஒரு கன்னியாஸ்திரி பொறுப்பாக இருப்பார். இவர்கள் எல்லோரும் அன்றைய தினமே கிளாலியிலிருந்து படகுகள் மூலம் ஆலங்கேணிக்குப் பயணத்தை மேற்கொள்வார்கள். அங்கிருந்து உடனடியாக ஓமந்தைக்குப் பயணமாவார்கள். இதற்கான வாகன ஒழுங்குகள்ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஓமந்தை சென்றதும் அங்குள்ள பன்றிக்கெய்திய குளம் என்னும் இடத்தில் அன்றிரவு சகலரும்தங்குவதற்கான தங்குமிடவசதிகள் ஏற்கனவெ ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மறுநாள் 19ம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு இதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின் நேராகத் தாண்டிக்குளம் சோதனைச் சாவடிக்கு எல்லோரும்கூட்டிச் செல்லப்படுவார்கள். இங்கு இராணுவச் சோதனையை இலகுவாக மேற்கொள்வதற்கு வசதியாக இரண்டு கன்னியாஸ்திரிகள் உதவுவார்கள். சோதனைச் சாவடியில் வைத்து இவர்களுக்கான பாஸ் வழங்கப்படும்.

இதன் பின் இவர்கள் அனைவரும் தாண்டிக்குளம் புகையிரத நிலையத்திலிருந்து புகையிரதத்தில் புறப்படுவார்கள். இப்புகையிரதம் வவுனியா சென்றடைந்ததும் வவனியாவில் வைத்து இவர்களுக்கான மதிய போசனப்பொதிகள் வழங்கப்படும்.

வவனியாவிலிருந்து கொழும்பு சென்றடைந்ததும் மருதானை புகையிரதநிலையத்தில் இவர்கள் அனைவரும் இறங்கி அங்கிருந்து கொழும்பு சுகததாசா ஸ்ரேடியத்துக்குஅழைத்துச் செல்லப்படுவார்கள். சுகததாசா ஸ்ரேடியத்தில் இவர்கள் அனைவரும் தங்குவதற்கான தங்குமிட வசதிகள் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். -162-சி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-01-17

செவ்வாய் இரவு

08-01 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08-10 அறிந்துகொள்ளுங்கள் - தகவற்களஞ்சியம்
08-20 நலந்தாஞ - ''மனிதனின் மூட்டுக்களில் ஏற்படுகின்ற பிரச்னைகளுக்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்''
08-30 செய்திகள்
08-40 கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய ''தியாகம்''
08-50 மலரும் மொட்டுகள்
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

1995-01-18

புதன் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

1995-01-17

செவ்வாய் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 தமிழிசை
05-30 வானெலி மதியூகம் இல. 03
06-00 சிந்தனைக்கு சில விஞடிகள்
06-02 இவ்வாரம் இவர் - நிகழ்ச்சியின் விளையாட்டு வீரர் க. சுபாஸ்கரன் அவர்களுடனன செவ்வி
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

### பலதும் பத்தும்

#### சரசோதி மாலை

ஈழத்தில் தோன்றிய பழமையான நூல்களில் ஒன்றுதான் சரசோதிமாலை. இதில் 994 விருத்தப்பாக்கள் உள்ளன. இதனை கி. பி. 1310ல் எழுதியவர் போச ராசப் பண்டிதர் யாரிவர்; தம்பதெனியாப்பகுதியை ஆண்ட மூன்ரும் பராக்கிரமபாகுவின் அவைக்களப்புலவர்.

ஈழத்தில் தோன்றிய சோதிட நூல்களில் இதுவும் ஒன்று. யார் நெல்விதைத்தால் நன்ருக விளையும். யார் மகுடம் சூடி அரசாளத்தகுந்தவர் போன்ற பல சங்கதிகளும் இதில் உண்டு.

இன்றைய நவீன உலகில் செய்யுள்களில் மறைத்துப் புதைத்து வைக்கப்பட்ட சோதிடக் கருத்துக்களை ஆய்ந்தறிய யாருக்கு ஒய்வுண்டு!

எனினும் சில சோதிட அறிஞர்களாயினும் சிறு குறிப்புகளாக எளியதமிழில் இவற்றை வெளியிடவேண்டாமோ?

– மயூரன்

## இன்று

[கொழும்புத்துறை[

தொல்புரம் மத்தி கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதி முத்து மாரி அம்பாள் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பகல் தைப்பூசம் விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாடுகள் நடைபெறும். 154

* * *

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை தைப்பூசம் விசேட அபிஷேகம் பூசை வழிபாடுகளும் நடைபெற்று மாலை விநாயகப்பெருமான் மஞ்சந்தில் வெளிவீதி உலா வருவார். 154

* *

[கொழும்புத்துறை]

பொன்னலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை தைப்பூசம் விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாடுகள் இடம்பெறும். 154

* * *

[உடுவில்]

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலய மணவாளக் கோல விழாவும் இலட்சார்ச்சனை விழாவும் தைபபூச தினமான இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளன. மூலமூர்த்திக்கு சங்காபிஷேகம் பரிவார மூர்த்திக்கு உருத்தி " அபிஷேகம் விசேட பூசை, திருவிழாஇடம்பெறும்.

* * *

[யாழ்ம்பாணம்]

ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் மிருதிக்கா பிருந்தாவனம் மாதாந்த இசை ஆராதனை இன்று 17ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும். இவ் இசையாராதனையின்போது யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கத்தினரின் பஜனை நிகழ்ச்சி இடம்பெறும். 162

* * *

[யாழ்ப்பாணம்]

வதிவிட வேளாண்மைப் போட்டியாளர்களுக்கான பயிற்சி வதப்புக்கள் விவசாயக் கல்லூரி, திருநெல்வேலியில் கிராம அலுவலர்களுக்கும் அவர்களது பிரிவிலுள்ள போட்டியாளர்களுக்கும் நடைபெறவுள்ளது. இப்போட்டி இன்று 17ம் திகதி ஜே/89 - ஜே/108 வரையுள்ள பிரிவின் கிராம அலுவலர்களுக்கும், 19ம் திகதி ஜே/109 - ஜே/138 வரையுள்ள பிரிவின் கிராம அலுவலர்களுக்கும் நடைபெறும்.

## இராசி பலன்

17-1-1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு தை 03)

பிரதமை: பின்னிரவு 3-21 வரை, பூசம்: வைகறை 5-39 வரை, சித்தயோகம், தைப்பூசம், கரிநாள், இராகு காலம்: மாலை 3-35 முதல் 5-05 வரை, சுபநேரம், காலை 11-05 முதல் 12-35 வரை.

மேடம்: விரோதச்செயல், தாயார் கோபம், மனச் சுமை.

இடபம்: கடமை உணர்வு, சுபகாரியம், பணவரவு.

மிதுனம்: கெட்ட சகவாசம், குடும்பப் பகை, அகால உணவு.

கடகம்: அதிகாரிகள் பெருமை, நண்பர் சகவாசம்' பெண் உதவி.

சிங்கம்: அமைதி குன்றல், கடித தொல்லை, காரியதடை.

கன்னி: அறிஞர் சகவாசம், புதிய திட்டம்' தான தர்மம்.

துலாம்: தொழில் லாபம்' சுபகாரிய செலவு, கலந்து பேசுதல்.

விருச்சிகம்: விரோதித்தல், பணியாள் துயரம்' அலைச்சல்.

தனுசு: வழித் தொல்லை, உடல்உபாதை, தொழில் கஷ்டம்.

மகரம்: முயற்சிபலிதம், குடும்ப செலவு, பயண ஏற்பாடு.

கும்பம்: பகைமை நீங்குதல், சகோதர உணர்வு, விருந்தோம்பல்.

மீனம்: மனப்போராட்டம், தொழில் சங்கடம்' புத்திரர் கவலை;

ஜோஸ்யர்

இயற்கை எம் உடமை – அதைக் காப்பது நம் கடமை.

# இனப்பிரச்னை விவகாரத்தில்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

நிற்கிறது. ராணுவம் அதாவது யாழ்ப்பாணத்தின் கழுத்தைச் சுற்றி ஒரு முள் வேலி போட்டதுபோல் இவ்விருபாதையையும்மறித்து தடுத்து முற்றுகையிட்டு இராணுவம் நிற்கிறது.

## பாதையைத் திறக்குமாறு கேட்டோம்

அப்போது நாம் பாதை ஒன்றை திறக்குமாறு கேட்டோம். பூநகரியை திறக்குமாறு கேட்டோம். பூநகரியை திறக்குமாறு நாம் கேட்டதற்கு பல காரணங்கள் உண்டு. ஆனையிறவில் அது இராணுவம் கடந்த30 ஆண்டுகளாக நிற்கிறது. அவர்களைப் பொறுத்தளவில் அது ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ நிலையம் அந்த இடத்திலிருந்து இராணுவம் இலகுவில் விட்டுவிலகாது.

## பூநகரி எமது நீண்டகாலப் பாதை

ஆனல் பூநகரியில் இராணுவம் வந்து தரித்தது கடந்த 3 ஆண்டுகளாகத்தான். இது நீண்டகாலமாக எமது மக்கள் பாவித்து வந்த பாதை. ஆகவே இந்தப் பாதையை திறந்து அதிலுள்ள இராணுவ முகாமை அகற்றிவிடுமாறு கேட்டோம். நாம் பூநகரியிலிருந்து படைமுகாமை அகற்றச் சொல்வதற்கும் வேறு காரணங்கள் உள்ளன. அதாவது யாழ். குடாநாட்டை முற்றுகையிட்டு குடாநாட்டின் மீது மிகப்பெரும் தாக்குதல் ஒன்றை நடாத்துவதற்காகத்தான் இராணுவம் பூநகரியிலும், ஆனையிறவிலும் வெற்றிலைக்கேணியிலும் பலாலியிலும் தீவுப்பகுதியிலும் சுற்றி வளைத்து நிற்கிறது.

## குடா நாட்டை சுற்றியும் ராணுவம்

யாழ். குடாநாட்டை சூழ இராணுவம் முக்கிய நிலைகளில் உள்ளது. அவர்களின் திட்டம் என்னவென்ருல் இந்த ஐந்து முனைகளிலிருந்தும்குடாநாட்டின் மீது பெரும் படையெடுப்பொன்றை எடுக்கும் திட்டத்தை நீண்டகாலமாகவே வைத்திருக்கிருர்கள் இந்தப்படையெடுப்பு நடைபெறவிருந்தது ஆனல் அரசாங்க மாற்றம்,தேர்தலில்,சந்திரிகாவின் சமாதானப்பேச்சு என்று வந்ததால் இந்தப் படையெடுப்பு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## ராணுவ திட்டத்தில் மாற்றமில்லை

ஒத்திப் போட்ட இராணுவம் இந்தப் பேச்சுவார்த்தை எப்படியும் குழம்பும், இந்தப் பேச்சுக்கள் சரிவராதுபோனல் தமது திட்டப்படி ஐந்து முனைகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்குள் ஊடுருவவேண்டும் என்ற திட்டத்தை தற்போதும் இராணுவம் வைத்துள்ளது, அதற்குத்தான் நாம் கூறுகிருேம் பூநகரியிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும்.

பூநகரியிலிருந்து வெளியேறுவதுஎன்ருல் இராணுவத்திற்கு யாழ். குடாமீது ஒரு முற்றுகை நடாத்தி பெரியதொரு அழிவை ஏற்படுத்தும் நோக்கமில்லை. உண்மையான சமாதானம் தான் நோக்கமாயிருந்தால் இந்தப் பாதையை விட்டு விலகவேண்டும். இந்தப் பாதையிலுள்ள இராணுவ முகாமை அகற்றுங்கள் என கேட்கிருேம்.

## இராணுவம் முற்ருக விலகவேண்டும்

ஆனல் இராணுவமோ பூநகரியிலிருந்து ஒரு அரை மைல் தூரத்திற்கு சொற்பம் விலகி நிற்பதாகவும் நீங்கள் இதனூடாக போங்கள் என்றும் கூறுகிருர்கள். அது எப்படி. கொஞ்சம் விலகும் இராணுவம், முற்ருக விலகிப் போகவேண்டும் என்று நாங்கள் கூறுகிருேம்.

சாதாரணமாக இதனை எப்படி கூறுவதென்ருல், எனது காணிக்குள் எமது முற்றத்தில் வந்து நீயொரு வேலியைபோடுகிருய். அதற்கு நான், இது நான் போகும் பாதை இந்த வேலியை எடு என்று கூறுகிறேன் அதற்கு நீ வேலியை நான் எடுக்க மாட்டன். வேண்டுமென்ருல் வேலியை பிய்த்து ஒரு பொட்டு வைக்கிறேன். அதனூடாக போ என்கிருய். பொட்டுக்குள்ளால் போகும் பழக்கம் எமக்கு இல்லை. பூநகரியில் போய் ஒரு பொட்டுக் கடையை போட நாம் தயாராயில்லை. வேலியை முற்ருக அகற்றிவிடு. நாங்கள் நேராக அந்த பாதை யூடாக போகவேண்டும்.

## கிழக்கில் 200 படை முகாம்கள்

இப்படித்தான் நாங்கள் கேட்டோம். இதில் ஒரு முக்கியமான முடிவு எடுக்கவேண்டும், இந்த முறை இது பற்றிப் பேசினர்கள். இந்தப் பேச்சின்போது பூநகரிப் பாதை திறப்புத்தான் முக்கிய விடயமாக இருந்தது. அதில் நாம் பல விளக்கங்களைக் கொடுத்தோம். சமாதானம் ஏற்பட்டால் வடக்கு-கிழக்கில் இருக்கும் எல்லா இராணுவ முகாம்களையும் அகற்றுவதாக நீங்கள் கூறுகின்றீர்கள். கிழக்கில் மாத்திரம் 200 படை முகாம்கள் இருக்கின்றன. சரி, இவ்வளவு இராணுவ முகாம்களையும் அகற்றுவதாகக் கூறுகின்றீர்களே, ஒன்றையாவது இப்போது அகற்றிக் காட்டுங்கள்.

## பாதையில் நந்திமாதிரி குந்திவிட்டனர்

இது எங்களது பாதை; நாங்கள் நடமாடும் பிரதேசம். அதில் நீங்கள் நந்திமாதிரி குந்தியிருக்கிறீர்கள். இதனை அகற்றிக் காட்டுங்கள். அப்போதுதான் எமது மக்களுக்கும் ஒரு நம்பிக்கை வரும். ஆனல் அவர்களை இராணுவத் தலைமையுடன் கதைக்கவேண்டும். இராணுவம் இதற்கு விட்டுக்கொடாது என்ற ரீதியில் கூறுஞர்கள். ஆனல் அதை நாம் வலியுறுத்திக் கூறினேம்.

## பலாபலன் போர்நிறுத்தம் மாத்திரமே

மூன்று கட்டப் பேச்சுக்கள் நடந்துள்ளது. இதில் முக்கியமாக என்ன பலாபலனை கண்டீர்கள் என்று கேட்கலாம். எம்மை பொறுத்தவரை ஒட்டுமொத்தமான பலாபலன் என்னவென்ருல் இந்தப் போர்நிறுத்தம்தான்: போர்நிறுத்தம் மூலம் தற்போது யுத்தத்தை நிறுத்தி வைத்துள்ளோம். ஒரு சமாதான சூழலை ஏற்படுத்தியுள்ளோம். இது விடுதலைப் புலிகளின் முழு முயற்சியும் ஒத்துழைப்புடனும் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தப் போர்நிறுத்தத்தை எந்தக் காரணம் கொண்டும் விடுதலைப்புலிகள் மீறமாட்டார்கள். ஏனெனில் நாம் போர்நிறுத்தத்தில் உறுதியாக இருககின்ருேம். தலைவர் அதை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

## கிழக்கில் இராணுவம் தர்பார்

ஆனல் எங்களுக்கு பிரச்னை இருக்கிறது. கிழக்கில் இராணுவம் எமது போரராளிகள் சுதந்திரமாக நடமாடக் கூடாது, ஆயுதங்களை தரித்திருக்ககூடாது, இராணுவ சோதனைகளுக்குட்பட்டுத்தான் போகவேண்டும் எனப் பிரச்னைகளைபோடுகிறது அனேகமாக இவை சுமுகமாக தீர்க்கப்படும் என்றே கருதுகிருேம். ஏனெனில் அரச குழுவினர் இந்த வாக்குறுதியுடன் திரும்பிச் சென்றுள்ளார்கள்.

அப்படியானதொரு சூழ்நிலை வந்தால் ஒரு நிலையான உறுதியான, போர் நிறுத்தம் ஏற்படும்.

இரு தரப்பும் யுத்தத்தை நிறுத்தி ஒரு சமாதான சூழ்நிலையை ஒரு இயல்பான நிலைமையை ஏற்படுத்துவது என்பது முக்கியமான விடயம். 4 ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சியான போராட்டத்துக்கு பின்னர் இப்படியொரு இடைவெளி வந்துள்ளது. இயல்புநிலை வந்துள்ளது. அடுத்தது என்ன வேண்டும்.

அடுத்தது எமது மக்களுக்கு அத்தியாவசியமான பொருட்கள் இங்கு வரவேண்டும்.

## பிரச்னையை நல்லமுறையில் தீர்க்கவேண்டும்

தொழிலுக்குப் போகவேண்டும், மக்கள் மூன்று நேரமும் வயிருர சாப்பிடவேண்டும். அந்தப் பிரச்னைதான் எமக்கு முக்கியமானது. மக்களின் பொருளாதார வாழ்வு சீராக வேண்டும். அதற்காகத்தான் பொருளாதார தடையை நீக்குமாறு கேட்கிருேம்.

அரசாங்கம் பொருளாதாரத் தடையைமுற்ருகநீக்குமானல் போராட்டத்தில்பேச்சுவார்த்தைகளில் ஒரு முன்னேற்றம் என்று சொல்லலாம்.

அடுத்து இருப்பது பாதை திறக்கும் விடயம். இப்பொழுது பாதை ஒன்று இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. கிளாலி பாதை ஊடாக மக்கள் போய் வருகின்ருர்கள் பெரிய கஷ்டத்தை எதிர்நோக்குகின்ருர்கள். ஆனல் இந்தப் பாதையை திறந்து விட்டால் பொருளாதாரத் தடை நீக்கப்பட்ட பொருட்கள், யாழ். குடாநாட்டுக்கு கொண்டுவருவதற்கு இலகுவாக இருக்கும். போக்குவரத்தும் இலகுவாக இருக்கும். எனவே அரசாங்கம் இந்தப் பிரச்னையை நல்லமுறையில் தீர்க்கவேண்டும் என்று வலியுறுத்திக் கூறியிருகின்ருேம். இந்தப் பாதையை திறப்பதற்கு எந்தளவு முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டுமோ அந் அளவுக்கு வலியுறுத்தி கூறி இருக்கின்ருேம்.

## இனப் பிரச்னை பற்றி பேசத் தயார்

ஆகவே இந்தப் பாதையை திறந்துவிட்டால் பேச்சுவார்த்தையில் 'கணிசமான முன்னேற்றம்' ஏற்படும் என்று சொல்லலாம்.

இதேவேளையில் நாங்சள் கடல்வலயச் தடைச்சட்டம் இரவுவேளைகளில் மீன் பிடித்தலுக்கு எதிராகப் போடப்பட்ட சட்டங்களை நீக்குமாறு கேட்டிருக்கிருேம். இவையெல்லாவற்றையும் நல்ல முறையில் தீர்த்துவைப்பதாக கூறிச் சென்றிருக்கிருர்கள்.

ஆனல் அடுத்த பேச்சுவார்த்தைக்கான திகதி குறிக்கப்படவில்லை. ஏனென்ருல் அதில் சிக்கல் ஒன்று இருக்கின்றது. அடுத்தமுறையும் வந்தால் இதே பிரச்னைதான் இங்கிருக்கும். ஆனபடியால் மூன்று தடவைகள் அவர்கள் இங்கே வந்து, இதே பிரச்னை பற்றி பேசி, இதே வாக்குறுதிகள் தந்து நாலாவதுதடையும் எந்த முகத்தோடு இங்கு வருவார்கள். வரமுடியாது. பிரச்னைகளை தீர்த்தபின் தான் வரவேண்டும்.

இனப்பிரச்னை பற்றி பேசுவதற்கு நாங்கள் தயார். இந்த அன்ருடப் பிரச்னைகளை தீர்த்துவைக்கவேண்டும் என்று கூறி, இனப் பிரச்னையை நாம் தள்ளிப் போடுவதாக சில கொழும்புப் பதிரிகைகள் குற்றம்சாட்டியுள்ளன. ஆனல் அப்படி ஒன்றுமில்லை.

## நிபந்தனைகள் விதிக்கவில்லை

இனப் பிரச்னையை பேசுவதற்கு தயாராக இருக்கிருேம். அதற்கு எந்தவிதமான நிபந்தனைகளையும் நாங்கள் விதிக்கவில்லை: ஆனல் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைப்பார்கள் என்ருல் மக்களின் அன்ருடப் பிரச்னைகளைத் தீர்த்து விட்டார்கள் என்ருல் ஒரு உறுதியான போர் நிறுத்தம் ஏறபட்டு விட்டதென்ருல் ஒரு இயல்பு நிலை தோற்றுவிக்கபட்டால் பேச்சுவார்தைகள், அரசியல் பேச்சுவார்த்தைகள் சுமுகமான நிலையில் முன் எடுத்து செல்ல வாய்ப்பாக அமையும் என்பதைத்தான் நாங்கள் வலியுறுத்தி இருக்கின்ருேம்.

ஏனவே இனப்பிரச்னையை பற்றி எப்போது பேசுவீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். இனப்பிரச்னை பற்றி பேசுவதாக இருந்தால் அன்ருடப் பிரச்னைகள் தீர்ந்ததும் அடுத்த கட்டமாக இனப்பிரச்னை பற்றி பேசுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்ருேம்.

## தலைவர் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்

தலைவர் அவர்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் இதைத் தெளிவாக வலியுறுத்தி இருந்தார். பேச்சுவார்த்தைகள் கட்டம், கட்டமாக படிப்படியாக முன் எடுக்கப்படவேண்டும். இந்தப் பிரச்னை சரியான சிக்கலான பிரச்னை. கிட்டத்தட்ட அரை நூற்ருண்டு காலம் வரையில், நீண்ட வரலாற்றைக் கொண்ட சிக்கலானஇனப்பிரச்னை. இவற்றை அவசரப்பட்டுத் தீர்க்க முடியாது.

## அன்ருடப் பிரச்னை இனப்பிரச்னை வேறல்ல

ஒன்றை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அன்ருடப் பிரச்னைகள் இனப்பிரச்னையின் ஒரு அம்சமாகும். அது வேறல்ல. இந்த யுத்தத்தால், முந்திய அரசாங்கத்தின் ஒடுக்கு முறைகளால் ஏற்பட்ட விளைவுகள் தான் இந்த அன்ருடப் பிரச்னைகளாகும். இதைத் தீர்ந்து வைப்பது இனப்பிரனையின் ஒரு அம்சத்தை தீர்த்து வைப்பதாக இருக்கும். இதை ஸ்ரீலங்கா அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே அன்ருடப் பிரச்னை வேறு, இனப்பிரச்னை வேறு என்று கூறி அதை வேறுபடுத்திக் காட்ட முடியாது. அப்படிக் காட்டவும் கூடாது,

## தீர்வு திட்டத்தை எதிர்பார்க்கிருேம்

சிறிலங்கா அரசாங்கம் தாங்கள் ஒரு தீர்வுத்திட்டம் தயாரித்துக் கொண்டிருப்பதாகக் கூறுகிருர்கள். அந்தத் தீர்வுத் திட்டத்தை எங்களிடம் பரிசீலனைக்கு கொண்டு வந்து, முன்வைப்பதாகச் சொல்கிருர்கள். அந்தத் தீர்வுத் திட்டத்தை தான் நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருேம் அவர்கள் தீர்வுத் திட்டத்தை வைத்தால் பரிசீலனை செய்வதற்கு தயாராக இருக்கிருேம் என்ருர்.

(மிகுதி நாளை வரும்)

சி-கே-ம-இ

---

## தளபதி கேணல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஈகச் சுடரை ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியை அரசியல்த்துறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் ஏற்றிவைத்தார். யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராசா மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

ஒன்பது வீரவேங்கைகளினதும் உருவப்படங்களுக்கு சிறப்புத்தளபதி செல்வராசா மலர் மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தினர். மாவீரர்களின் பெற்ருேர்கள், உறவினர்கள் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர் பெருந்தொகையான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

கேணல் கிட்டு மற்றும் ஒன்பது வீரவேங்கைகளை நினைவு கூருமுகமாக இவர்களின் வீடியோ படக்காட்சி காண்பிக்கப்பட்டது. இந்தநிகழ்வை ஒட்டி இப்பூங்காவுக்குள் நுழைவதற்கு சகலரும் எதுவிதகட்டணமுமின்றி இலவசமாக அனுமதிக்கப்பட்டனர்.

பல்வேறு பகுதிகளிலுமிருந்து போராளிகளும், பொதுமக்களும் இங்குவருகை தந்து இம் மாவீரர்களுக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்துவதை காணக் கூடியதாக இருந்தது. பொது மக்களின் நன்மை கருதி கேணல் கிட்டு நினைவுப் பூங்காவில் அமைக்கப்பட்டிருக்கும் நூலகம் நேற்று முதல் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளையில் மத்திய பஸ் நிலையம் மற்றும் நாச்சிமார் கோவிலடியில் அமைக்கப்பட்டிருக்கும் கேணல் கிட்டு மற்றும் ஒன்பது வீர் வேங்கைகளின் உருவம் படங்களுக்கு விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் நேற்றுக் காலை ஈகச்சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வின்போது பெரும் திரளான மக்கள் கலந்துகொண்டனர். மாவீரர்களை நினைவுகூரும் அஞ்சலிக் கீதங்களும் இசைக்கப்பட்டன

162-இ

---

## மோதல் தவிர்ப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் விடுதலைப் புலிகளின் தளபதிகளும் இராணுவத் தளபதிகளும் சந்தித்துள்ளனர்.

இதேவேளையில் வடபகுதிக்கான மோதல் தவிர்ப்பு கண்காணிப்பு குழுக்களுக்கு தலைமைதாங்கும் கனேடிய பிரதிநிதிகள் கொழும்புக்கு வந்தது பற்றிய தகவல் எதுவும் அறியவரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே-இ)

---

## சர்வஜன வாக்கெடுப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்படும்.

ஐக்கியதேசியக்கட்சி இந்த திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளிக்குமா என்பது பற்றி எமக்குந் தெரியாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்,

அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அரசியலமைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை தயாரிபபதில் ஈடுபட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு, அதன் பணியினை ஜூலை மாத முற்பகுதியில் முடித்துவிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ம-இ

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-